

# இசைக்கலைமணி
# திரு. அண்ணாமலை செல்வரத்தினம் அவர்களின்
# இசைவாழ்வும் பணியும்



கலாபூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் அவர்களின்

ஞாபகார்த்த கையேடு

2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் அவர்களின்
15 ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக

15.12.2024 அன்று

சமகால கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான
இலங்கையின் ஆவணக் காப்பக நிறுவனத்தில்

# "திலகார்ப்பணம்"

நிகழ்வின் போது வெளியிடப்பட்டது



தொகுப்பு:

கலாவித்தகர் திருமதி குமுதா உமாகாந்தன்
ஆசிரியர்
யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரி
&
போஷகர்
சோமராகம் இசைமன்றம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

தமிழிசைப்பாடல்களை முன்னிலைப்படுத்தி தனது இசை நிகழ்ச்சிகளில் கர்நாடக சங்கீத நெறிபிறழாத வகையில் ரசிகர்கள் அனைவரையும் தம்வசப் படுத்தியவர் எனது குருநாதர் 'இசைச்செம்மல், ஸ்வரலயஞானசுரபி, 'சங்கீதபூஷணம்' திரு. எல். திலகநாயகம்போல் அவர்கள் ஆவார். அவர்களின் ஞாபகார்த்தமாக "சோமராகம்" இசை மன்றத்தினால் நிகழ்த்தப் படும் "திலகார்ப்பணம்" நிகழ்வானது இம்முறை 15 ஆம் ஆண்டு நினைவாக 15.12.2024 அன்று நிகழ்த்தப்படுகின்றது.

தொடர்மழை, வெள்ளம் போன்ற இயற்கை மாற்றங்களிடையில் போல் சேர் அவர்களின் 15ஆம் ஆண்டு நிகழ்வு என்பதனால் மிக எளிமையாக நடாத்த விளைந்தோம். அந்தவகையில் எமது திலகார்ப்பணம் நிகழ்வில் எமது வழமையான ஒழுங்கமைப்பிற்கமைவாக யாழ்ப்பாணத்தின் மூத்த கலைஞர் ஒருவரைக் கௌரவித்தல் என்பது முக்கிய நிகழ்வாகும். இவ்வருடம் 'இசைக்கலைமணி' திரு.அண்ணாமலை செல்வரத்தினம் அவர்களைக் கௌரவிக்கவுள்ளோம்.

எனது குருநாதர் போல் சேர் அவர்களுக்கும் இன்னும் பல மூத்த இசைக்கலைஞர்களுக்கும் எனது இசை நிகழ்விற்கும் கடம் இசைத்து இசை அரங்குகளைச் சிறப்பித்து வந்துள்ள மூத்த "கடம்" வாத்தியக் கலைஞர் இசைக்கலைமணி திரு.அண்ணாமலை செல்வரத்தினம் அவர்களிற்கு திரு. எல். திலகநாயகம் போல் அவர்களின் ஞாபகார்த்த விருதான "இசைத்திலகம்" விருதினை வழங்கிக் கௌரவித்து அவரது இசை வாழ்வு பற்றி இப்பதிவினை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கையேட்டினைத் தயாரிப்பதற்கு எமக்குப் பூரண ஒத்துழைப்பினை நல்கிய செல்வரத்தினம் சேர் அவர்களிற்கும், அவர் தம் குடும்பத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் என்னுடன் தோளோடு தோள் நின்று இக்கையேட்டை அச்சிடுவதற்கு உதவிய எனது மாணவன் ஸ்ரீ.ஸ்ரீபரன் (ஆசிரியர், யா/ சென். ஜோண்ஸ் கல்லூரி) அவர்களிற்கும் நன்றிகள். நிகழ்ச்சி ஒழுங்குகளிற்கும், மாணவர்களை நெறிப்படுத்துவதற்கும் துணை நின்ற எனது மாணவனும், மன்றத்தின் ஆசிரியருமான திரு.ஸ்ரீ.சாருஜன் (ஆசிரியர், யா/ சென். ஜோண்ஸ் கல்லூரி) அவர்களிற்கும் எனது நன்றிகள். மிகவும் குறுகிய காலத்தில் இக்கையேட்டை அச்சிட்டுத் தந்துதவிய அரிசோனா பிறைவேற் நிறுவனத்திற்கும், எனது குருநாதரின் குடும்பத்தினர், எனது மாணவர்கள், அவர் தம் பெற்றோர்கள், பெரியோர்கள், நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றிகள்.

எனது இம் முயற்சி தொடர்ந்தும் நன்முறையில் நடந்தேற எல்லாம் வல்ல இறைவனதும், எனது அன்னையினதும், என் குருவினதும் பாதார விந்தங்களைப் பணிந்து உங்கள் அனைவரதும் ஆதரவை வேண்டி இக்கையேட்டை உங்கள் கரங்களில் தவழவிடுகின்றேன்.

**கலாவித்தகர் திருமதி. குமுதா உமாகாந்தன்**
**"சோமராகம்" இசைமன்றம் &**
**யாழ்./ சென்.ஜோண்ஸ் கல்லூரி இசை ஆசிரியர்.**

"சோமராகம்"
323/8D, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
இலங்கை.
+94776407643
kumuthanallur@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்கலைமணி திரு அண்ணாமலை செல்வரத்தினம் அவர்களின் இசை வாழ்வும் பணியும்



**பிறப்பிடம்** - பருத்தித்துறை தென் புலோலி முருகன் கோவிலடி

**பெற்றோர்** - திரு.திருமதி அண்ணாமலை கனகம்மா தம்பதியினர்

**பிறந்த காலம்** - 09/08/1954

**இயற்பெயர்** -செல்வரத்தினம்

வடமராட்சியின் சொத்தாக விளங்கும் பழம்பெரும் ஆலயங்கள் புடைசூழ, எம் பாரம்பரியமும் பண்பாட்டு, சமய கலாசார விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட தமிழ் புலமைமிகு புலவர்களை எமக்கு ஈய்ந்த சிறப்புடை ஊரே புலோலியூர் ஆகும். அத்தகைய பெருமைமிகு புலோலியூரின் தென் பகுதியில் முருகன் ஆலய அண்மையில் வாழ்ந்த அண்ணாமலை கனகம்மா தம்பதியினருக்கு மூன்றாவது மகனாக பிறந்தவரே திரு. செல்வரத்தினம் ஆவார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கற்று பின்னர் ஆறாம் தரம் தொடக்கம் க.பொ.த உயர் தரம் வரையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார். பின்னர் தனது உயர் கல்வியை **1976** ஆம் ஆண்டு இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் (இன்றைய நுண்கலைப் பீடம்) இணைந்து மிருதங்கத்தில் "இசைக்கலைமணி" பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவருடைய தாயின் தகப்பனார் ஒரு நாடகக் கலைஞராவார். தாய்மாமன் திரு. தம்பையா எண்பவர் ஒரு நாடக நடிகராகவும் ஹார்மோனிய வித்துவானாகவும் திகழ்ந்தார். இவருடைய தந்தையின் சிறிய தகப்பனார் அரியக்குட்டி எண்பவர் ஓர் மிருதங்கக் கலைஞராவார். இவ்வாறான கலைப்பின் புலத்தை கொண்டு இருந்த செல்வரத்தினம் அவர்கள் இயற்கையாகவே லயத்துடன் பாடும் திறமை கொண்டிருந்தார். இவ் அடிப் படையே இவர் மிருதங்கம் பயில்வதற்கு உறுதுணையாக அமைந்திருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பதினோராவது வயதில் வடமராட்சி மாதர் சங்கத்தில் சங்கீதபூஷணம் திரு. T.D. செல்வராஜாவிடம் முறைப்படி மிருதங்கத்தைக் கற்று வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளில் தோற்றி சித்தியடைந்தார்.



திரு. T.D. செல்வராஜா அவர்கள் வெளிநாடு செல்ல சங்கீதரத்தினம் திரு. வி. சின்னராசா ஆசிரியரிடம் கற்று வ.இ.ச. சபை ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தியடைந்தார். பின்னர் இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் சங்கீதபூஷணம் திரு. A.S. இராமநாதன் அவர்களிடம் மிருதங்க சிறப்புப் பயிற்சியைப் பெற்று வ.இ.ச. சபை ஆறாம் தரப் பரீட்சையில் சித்தியெய்தி "கலாவித்தகர்" பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

*1979*இல் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் டிப்ளோமா பட்டத்தைப் நிறைவு செய்து கொண்டு இந்தியா சென்றார். அங்கு கேரள மாநிலத்தின் அரச நுண்கலைக் கல்லூரியான கேரள கலா மண்டலத்தில் கதகளி நடனத்தில் பிரதான வாத்தியமான செண்டை வாத்தியத்தில் விசேட பயிற்சி பெற்று நாடு திரும்பினார். இதன் தொடர்ச்சியிலேயே நடனக் கலைஞர் திரு.வேல் ஆனந்தன் அவர்களின் ஆடற் கலையகத்தின் செண்டை வாத்தியக் கலைஞராக கடமையாற்றியுள்ளார். திரு.வேல் ஆனந்தன் அவர்களின் மாணவி திருமதி. பத்மினி செல்வேந்திரகுமார் அவர்களின் நடன நிகழ்வுகளுக்கும் செண்டை வாத்தியத்தை வாசித்து வருகின்றார்.





*1984*ஆம் ஆண்டு தொடக்கம் *2014* ஆம் ஆண்டுவரை யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் வாத்திய பொறுப்பாளராகக் கடமையாற்றியுள்ளார். இடப்பெயர்வின் முன்னர் நீண்ட காலமாக திருமறைக் கலாமன்றத்தின் மிருதங்க ஆசிரியராக கடமையாற்றி வந்துள்ளதுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்டு வரும் கலை வகுப்புக்களிலும் மிருதங்க ஆசிரியராகவும் குறிப்பிட்ட காலம் விளங்கியுள்ளார். இவ்வாறான மன்றங் களிற்கு மேலதிகமாக தனிப்பட்ட முறையில் வீடுகளிற்குச் சென்றும் மிருதங்க வகுப்புக்களை நடாத்தி வந்துள்ளார்.



இவர் மிருதங்கத்தை பயின்றுகொண்டிருந்த காலத்திலேயே பாடசாலையின் நடன, இசை நிகழ்வுகளுக்கும், பாடசாலைக்கு வெளியே ஏனைய கலை நிகழ்ச்சிகளுக்கும், சங்கீதக் கலைஞர்களுக்கும் மிருதங்கம் இசைத்து வந்துள்ளார். இவ் வாறான காலப் பகுதியில் இவரின் குருநாதர் சங்கீதபூஷணம் திரு. A. S. இராமநாதன் அவர்கள் கடம் இசைப்பது பற்றி கற்றுக்கொடுத்து நிகழ்ச்சி களில் கடம் இசைக்க வைத்தார். அக் காலப் பகுதியில் கடம் வாசிப்பதற்கு யாரும் இல்லாத காரணத்தினால் அவ் வாத்தியத்தை தொடர்ந்து வாசிக்கத் தொடங்கி காலப் போக்கில் கடம் வாத்தியத்தையே தனது பிரதான வாத்தியமாக வாசித்து வருகின்றார்.



இந்தியக் கலைஞர்கள் மிருதங்கம் தவிர்ந்த ஏனைய தாள வாத்தியங்களான கடம், கெஞ்சிரா, முகர்சிங், தபேலா வாத்தியங் களில் தமக்கான வாத்தியம் ஒன்றில் தனித்துவமாக விளங்குவது போன்று இவரும் கடம் வாசிப்பதில் தனித்துவமானவராகத் திகழ்கின்றார். இதனால் “கடம் செல்வரத்தினம்” என்று குறிப்பிட்டால் இவரை தெரியாதோர் யாருமில்லை எனக் கூறுமள விற்கு சிறப்பிற்குரியவராகத் திகழ்கின்றார்.

**1990**ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த ஜெயரோகினியை கரம் பற்றி ஜனகன், பிரவீணா, வரவீணா ஆகிய குழந்தைச் செல்வங்களைப் பெற்றுக்கொண்டார். இவர்களுள் புதல்வன் ஜனகன் வாய்ப்பாடு, மிருதங்கம் ஆகியவற்றை முறைப்படி கற்றுக்கொண்டுள்ள போதிலும் காலத்தின் ஓட்டத்தில் மென்பொருள் பொறியியற் பட்டப்படிப்பை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறைவுசெய்து தற்பொழுது PMF பைனான்ஸ் நிறுவனத்தின் முகாமையாளராக கடமையாற்றி வருகின்றார். சிரேஷ்ட புதல்வி பிரவீணா மட்டக்களப்பு விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவத்தில் நடனத்துறைப் பட்டப்படிப்பை நிறைவு செய்து, சென்னை பல்கலைக்கழத்தில் பரத நாட்டிய முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இளைய புதல்வி வரவீணா வாய்ப்பாட்டை கற்றிருந்த போதும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை சிறப்புப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளார். இவர்கள் மூவருமே கலை ஆர்வம் கொண்டவர்கள். மனைவி திருமதி. ஜெயரோகினி அவர்கள் தனது கணவரின் கலை வாழ்விற்கு மிகவும் உறுதுணையாக இருந்து வருகின்றார்.

திரு. செல்வரத்தினம் அவர்கள் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த வாய்ப்பாட்டு, வாத்தியக் கலைஞர்களுக்கு மிருதங்கம் இசைத் திருந்த போதிலும் பின்னைய காலங்களில் கடம் வாத்தியக் கலைஞராகவே தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டார். இந்த வகையில் அமரர் சங்கீதபூஷணம் S. கணபதிப்பிள்ளை, சங்கீதபூஷணம் எல். திலகநாயகம் போல், சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம், அமரர் சங்கீதபூஷணம் திரு. எஸ். சிவஞானசேகரம், அமரர் திரு. எஸ். குமாரசாமி, திரு. பொன். ஸ்ரீ. வாம தேவன், கலாவித்தகர் திருமதி. குமுதா உமாகாந்தன், வயலின் வித்து வான்களான அமரர் V. K. குமாரசாமி, அமரர் திரு. எஸ். சித்தி விநாயகம், அமரர் எஸ். வெங்கடேஸ்வரசர்மா, திரு. உ. இராதாகிருஷ்ணன்,





செல்வி. பாக்கியலட்சுமி நடராஜா, செல்வி. சாந்தா சுப்ரமணியம் ஆகியோரின் இசை நிகழ்வுகளிற்கும் மற்றும் இங்கு பெயர் குறிப்பிடாத பல கலைஞர்களின் இசை நிகழ்வுகளிற்கும்; யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரால், வட இலங்கை சங்கீத சபையினரால், நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் நடாத்தப்படுகின்ற சற்குரு ஸ்ரீ. தியாகராஜா ஸ்வாமிகள் ஆராதனை நிகழ்வுகள் மற்றும் இசைவிழா நிகழ்வுகள், தெய்வீக இசை அரங்க நிகழ்வுகள் என்பவற்றிலும் கலந்துகொண்டு மிருதங்கம், கடம் என்பவற்றை இசைத்து நிகழ்வை சிறப்பிப்பதுடன் கலைஞர்களையும் ஊக்குவித்தும் வந்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இசை நிகழ்வுகளிற்கு மட்டுமன்றி பல இசை, நடன அரங் கேற்றங்களிற்கும் கடம் இசைத்து வந்துள்ளார். அத்துடன் இசை இறு வெட்டுக்களிற்கும் கடம் இசைத்து வந்துள்ளார். வட இலங்கை சங்கீத சபையின் நீண்டகால உறுப்பினராகத் திகழ்ந்த இவர் இச் சபையின் மிருதங்கப் பரீட்சைகளின் பரீட்சகராகவும் நீண்ட காலம் கடமையாற்றி யுள்ளார். இவர் எனது மிருதங்க பரீட்சையின் போதும், எனது மகளின் மிருதங்க பரீட்சையின் போதும் பரீட்சகராக கடமையாற்றியது மட்டுமின்றி எனது குருநாதர் சங்கீத பூஷணம் எல். திலகநாயகம் போல் அவர்களிற்கு கடம் இசைத்து தொடர்ந்து எனது இசை நிகழ்வுகளிற்கும் கடம் இசைத்து எனது நிகழ்ச்சியை மெருகூட்டச் செய்து வந்துள்ளமையை மகிழ்வுடனும், பெருமையுடனும் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஆயுட்கால உறுப்பினராகிய இவர் இன்றுவரை மன்றத்தின் செயற் பாட்டுக்குழுவின் அங்கம் வகித்து அம் மன்றத்தினால் நடாத்தப்படும் அனைத்துவிதமான இசை நிகழ்வுகள், நல்லூர் உற்சவ கால தெய்வீக இசை அரங்கு என்பவற்றினை ஒழுங்கமைப் பதில் முன்னின்று செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் பல்வேறு கலை, இசை நிகழ்வுகளிலும், ஆலய இசை நிகழ்வுகளிலும் கௌரவிக்கப்பட்டுள்ளார். அத்துடன் இவரின்கலைச் சேவை



யைப் பாராட்டி நல்லூர் கலாசாரப் பிரிவினரால் "கலைஞானச் சுடர்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அத்து டன் இந்து சமய கலாசார அமைச்சு 2020ஆம் ஆண்டு "கலாபூஷணம்" விருது வழங்கி இவரது கலைச் சேவைக்கு அங்கீகாரம் வழங்கினர்.



இவர் மிருதங்கமாகட்டும் அல்லது கடமா கட்டும் கச்சேரிகளில் இசைக்கும் போது உடலில் எதுவித ஆட்ட அசைவும்,



ஆடம்பர மும் இன்றி அமைதியான முறையில் மிக லாவக மாக கையாள்வார். பெரியவர் முதல் சிறியவர் வரை எவராக இருப்பினும் பெருமை ஏதும் இன்றி நிகழ்ச்சியை மெருகூட்டுவார். ஏனைய கலைஞர்களுக்கு தனது ஆக்கபூர்வ மான கருத்துக்களைக்கூறி அவர்களின் நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறக்க உதவி புரிவார். தன்னடக்கமும், அமைதியான சுபாவமும், இறை பக்தியும் கொண்ட இவர் எமது பாரம் பரியமான கலைவடிவங்களை அதற்கேற்ற ஒழுங்கு முறையில் கற்கவும், கற்பிக்கவும், நிகழ்ச்சிகளை நடாத்தவும் வேண்டுமென்பதில் நாட்டம் கொண்டவர். இன்றைய கால கலைஞர்களதும், மாணவர் சமுதாயத்தினதும் திறமைகளைப் பாராட்டும் இவர் அவர்களின் பிறழ்வான செயற்பாடுகளிற்கு கண்டனம் தெரிவிக்கின்றார். இன்றைய கலை ஆசான்கள் சிறந்த பண்பாளராகவும், தாம் சார்ந்த கலையில் சிறந்த தேர்ச்சியுடன் தேடல் உடையவராகவும் திகழ்ந்து நல்லதோர் கலை சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென விரும்புகின்றார்.

இத்தகை சிறப்புறு கலைஞர் திரு. அ. செல்வரத்தினம் அவர்களுக்கு, அவர்களின் கலைச் சேவையைப் போற்றி சங்கீதபூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் “இசைத்திலகம்”எனும்விருதினைவழங்கிகௌரவித்துஅவரின்இசைவாழ்வு பற்றிய பதிவினை வெளிப்படுத்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**“கலை இன்பமே நிலை இன்பமாம்”**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arissona (Pvt) Ltd | No. 93, Palaly Road, Thirunelvely, Jaffna | 021 222 3 222, 076 141 9303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org